தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2043, தை 21

2012 பிப்ரவரி 4, சனிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.”

குடிகளை அன்போடு அணைத்துக் கொண்டு செங்கோல் செலுத்துகின்ற அரசனுடைய அடியைப் பொருந்தி உலகம் நிலைபெறும்.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவக்கொழுந்து, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

38—

பராமரிப்பு

***6850—திரு. ப. சிவக்கொழுந்து:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பண்ருட்டி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் ஊரகக் கிட்டங்கி நுழைவு வாயில் முன்பக்கம், வடக்கு மற்றும் தெற்கு பக்கங்களிலிருந்த மண் சாலைகள் சிமென்ட் மற்றும் கான்கிரீட் சாலைகளாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. மேலும், விற்பனைக் கூடத்தின் பரிவர்த்தனைக் கூடம் எண் 2–இல் பழுதடைந்துள்ள தரைப் பகுதி சரி செய்யப்பட்டு, இதர மராமத்துப் பணிகளும் இவ்விற்பனைக் கூடத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவக்கொழுந்து அவர்கள் இருக்கையில் இல்லை. மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் துணைக் கேள்வி கேட்கத் தயாராக இல்லை.*

வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

39—

சத்துணவு மையம்

***2215—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, புத்தாம்பூர் இராயவயல் தொடக்கப் பள்ளியில் புதியதாக சத்துணவு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி, புத்தாம்பூர் இராயவயல் கிராமத் தொடக்கப் பள்ளியில் 24–8–2011 முதல் சத்துணவு மையம் துவக்கப்பட்டு, 32 மாணவ,